ஏற்கெனவே கலந்து பேசிக் கொண்டிருக்கிறேன். தொடர்ந்து பேசி அதன் மூலம் இந்த அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கிற காரியங்களைச் செய்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர், குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி.

69—(*வினா எண். 7070)—**திரு. எஸ். இராசாராமன்** : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர், குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில், வணிகவியல், வேதியியல், இரசாயனவியல் மற்றும் பல பிரிவுகளில் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள் இடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அந்த இடங்கள் நிரப்பப் படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) இந்தக் கல்லூரியில் முதலில் வேதியியல் பேராசிரியர், இயற்பியல் மற்றும் வணிகவியல் ஆகிய பாடப் பிரிவுகளில் உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தன.

(ஆ) தற்போது வேதியியல் பணியிடங்கள் நிரப்பப்பட்டு இருக்கின்றன. மீதி இடங்களுக்கு எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சிலிருந்து நபர்கள் பெறப்பெற்று அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மகளிர் கலைக் கல்லூரியில் படிக்கின்ற மாணவிகள் பேராசிரியர்கள் இல்லாத குறைபாட்டினால் தேர்வு எழுதுவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். படித்துப் பட்டம் பெற்ற பேராசிரியர்கள் தமிழகத்திலே எத்தனையோ பேர்கள் இருக்கின்ற இந்த காலக் கட்டத்திலே உடனடியாக அந்தக் காலியிடங்களை நிரப்புவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேதியியல் பணியிடங்கள் நிரப்பப்பட்டு விட்டன. பிற பணியிடங்களுக்கு கல்லூரிக் கல்வி இயக்குநர் அவற்றை நிரப்புவதற்கு எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சிலிருந்து பெயர்களைப் பெற்று, தேர்வு நடத்தியிருக்கிறார்கள். அது தற்போது நிரப்பப்பட உள்ளன.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே இன்னொரு அரசு ஆண்கள் கலைக் கல்லூரி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் கல்லூரியில் வேலை பார்க்கின்ற பேராசிரியர்கள் இந்த மகளிர்

1987 நவம்பர் 12]

கலைக் கல்லூரிக்கு வருகை தந்து, கூடுதலாக ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் பாடங்களைக் கற்பிப்ப நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒப்பந்த அடிப்படையில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் அந்த இடங்களை நிரப்ப ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துவிட்ட காரணத்தால் இந்தக் கோரிக்கை தேவையில்லை.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளுக்கு மட்டும் பேராசிரியர்கள் தட்டுப்பாடு இருப்பதாக நான் சொல்லவில்லை. இன்னும் சாதாரணமாக இருக்கின்ற பள்ளிக்கூடங்களில் கூட பல ஆண்டுக் காலமாக ஆசிரியர்கள் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றனவே, அவைகளை முறையாக நிரப்புவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 6 மாத காலத்தில் மட்டும் கிட்டத்தட்ட 4,500 ஆசிரியர்கள் புதிதாக ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட்டு இருக்கிறார்கள்.

திரு. துரை கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே கல்லூரி பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவது குறித்த கேள்வியாக இருந்தாலும், தஞ்சையிலே நடக்கக் கூடிய பெண்கள் கலைக் கல்லூரியில் சேரும் மாணவிகளில் ஒட்டு மொத்தமாக பாதிப் பேர்கள் மரத்தடியில் அமர்ந்துதான் கல்லூரிப் பாடங்களை படிக்கின்ற ஒரு நிலைமை இருந்து கொண்டு வருகிறது. இது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கடிதம் மூலமாகவும், நேரிடையாகவும் 3 வருடமாக நாங்கள் எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறோம். மழைக்காலங்களில் ஒன்-செசன் என்ற முறையில் பாதிப் பேர்களை வீட்டுக்கு அனுப்புவதுமான ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை தஞ்சை பெண்கள் கலைக்கல்லூரியில் இருந்து கொண்டு இருக்கிறது. எனவே இதற்கான நல்ல முடிவை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிலைமை பல இடங்களில் இருக்கின்றது. நிதிப் பற்றாக்குறைதான் இதற்குக் காரணமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறிய கோரிக்கை குறித்து அரசு ஆய்ந்து விரைவில் ஒரு முடிவை எடுக்கும்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்தில் 4,000 சொச்சம் பேர்களுக்கு ஆசிரியர்கள் பதவி கொடுக்கப் பட்டது என்று சொன்னார்கள். இது புரட்சித் தலைவருடைய

ஆட்சியிலே எவ்வளவு சீக்கிரத்தில் அந்த ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டார்கள் என்பதைக் காட்டுகிறது. ஆனால் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இப்போது தமிழாசிரியர்களுடைய இன்டர்வியூ நடந்தது, அதிலே 150 பேர் களை போட்டார்கள்— மீதமுள்ள ஆசிரியர்களை ராமநாதபுரத் திலிருந்து தர்மபுரிக்கும், தர்மபுரியிலிருந்து கன்னியாகுமரிக்கும் என்று போடப்பட்டு இருக்கிறது. இதை உடனடியாக மாற்றி, புரட்சித் தலைவருடைய அரசுக்கு நல்ல ஒரு பெயரை உண்டாக் கித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழாசிரியர்களைப் பொறுத்தவரைக்கும் இருந்த காலி இடங்கள் மிகக் குறைவாக இருந்தன. எந்தெந்த மாவட்டங்களில் காலி இடங்கள் இருக் கின்றனவோ, அங்கு தமிழாசிரியர்கள் நிரப்பப்பட்டார்கள். ஆனால், செகண்டரி கிரேட் டீச்சர் பதவிகள் பொறுத்தவரைக் கும் அதற்கு போதிய ஆசிரியர்கள் தற்போது தமிழகத்தில் பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தால், தமிழாசிரியர்கள் பட்டம் படித்தவர்கள் கிட்டத்தட்ட 1,500 பேர்களை தற்போது தமிழகத்தில் எங்கெங்கே செகண்டரி கிரேட் டீச்சர் வேகன்சி இருக்கிறதோ, அங்கெல்லாம் தமிழில் பட்டம் பெற்று தமிழாசிரி யர்களாக இருப்பவர்களைப் போடலாம் என்று ஆணையிடப்பட்டு இருக்கிறது. இந்த ஆணை இடப்படுகிறபோதே, முடிந்த அளவிற்கு அந்தந்த மாவட்டத்திலேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பு தரவேண்டும் என்று அரசு ஆணையிட்டு இருக்கிறது.

வாழ்க்கைக் கல்வித் திட்டம்.

70—(*வினா எண். 9555)— திரு. செ. செம்மலை : மாண்பு மிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் அவர்களின் திட் டத்தின் தொடர்பாக 1—12 வகுப்பு வரை பாட திட்டத்தில் மாற்றம் செய்வதற்காக கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், கல்வித் துறைக்கு அந்த கமிட்டி ஏதாவது திட்டங்களைக் கொடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். 1984 பிப்ர வரியில் வாழ்க்கைக் கல்விக்காக முதலமைச்சர் திட்டத்திற்கேற்ப பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்பு வரை பாடத் திட்டங்களை மாற்றி அமைக்க குழுக்கள் அமைக்கப்பட்டன.

(ஆ) அக்குழுக்கள் 1 முதல் 12 வகுப்பு பாடங்களுக்கு திருத் திய பாடத் திட்ட வரைவை தயாரித்துள்ளன. வாழ்க்கைக் கல்விக் கான முதலமைச்சர் திட்டத்திற்கேற்பவும், பள்ளிகளில் பாடத் திட்டத்தை மாற்றி அமைக்க டாக்டர் மால்கம் ஆதி